25.03.2021 Pro.OP.12/2017

P.W.1 - Amutha

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர். முதல் மனுதாரர் சிவராமன் எனது மைத்துனர் ஆவார். 3ம் மனுதாரர் தரணி எனது மகன். தாவா சொத்துக்கள் குடியாத்தம் டவுனில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். அவை அனைத்தும் வீடுகள் ஆகும். எதிர்மனுதாரர், எனது நாத்தனார் ஆவார். தாவா சொத்துக்கள் ஆதியில் குப்பம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 06.09.1961ல் குப்பம்மாளுக்கும், தனபாக்கியம்மாளுக்கும், நடேச முதலியார் உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். நடேச முதலியார் 20 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். 19.02.1984ல் தனபாக்கியம்மாள், குப்பம்மாளுக்கு தன்னுடைய பாகத்தையும் விடுதலைபத்திரம் மூலமாக பாத்தியப்படுத்தினார். அதன்பிறகு குப்பம்மாள் அனைத்து சொத்துக்களும் அனுபவித்து வந்தார். முதல் மனுதாரர் சிவராமன் குப்பம்மாளின் மகன். எனது கணவர் சதாசிவம் குப்பம்மாளின் இன்னொரு மகன். எனது கணவர் இறந்துவிட்டார். நானும், தாரணியும் மட்டும் தான் வாரிசுகள் ஆகும். எதிர்மனுதாரர்,. குப்பம்மாளின் மகள். 31.01.2012ல் குப்பம்மாள் இறந்துவிட்டார். குப்பம்மாள் அவரது வீட்டிலேயே இறந்துவிட்டார். குப்பம்மாள் நல்ல உடல்நிலையுடன் இருந்துதான் இறந்துபோனார். இறப்பதற்கு முன்பு குப்பம்மாள் நன்றாக நடந்துக்கொண்டு இருந்தார். குப்பம்மாள் இறப்பதற்கு முன்பு, இன்றோ, நாளையோ அல்லது அடுத்த மாதமோ இறந்துவிடுவார் என்று சொல்லும் நிலையில் இல்லை என்றால் சரிதான். குப்பம்மாள் இருந்த அவரது வீட்டில் தான் நாங்களும் வசித்தோம். எதிர்மனுதாரரின் கணவர் பெயர் செல்வராஜ். எதிர்மனுதாரர்

பட்டேல் பாபா தெரு, சுண்ணாம்புபேட்டை, குடியாத்தத்தில் வசித்து வருகிறார்கள். முதல் மனுதாரர் சிவராமனுக்கு திருமணம் ஆகிவிட்டது. மனுதாரர்கள் நாங்கள் அனைவரும் குப்பம்மாளுடன் அவரது வீட்டில் தான் வசித்து வந்தோம். குடியாத்தத்தில் சார் பதிவாளர் அலுவலகம் தாலுக்கா அலுவலக வளாகத்தில் உள்ளது என்றால் சரிதான். தாலுக்கா அலுவலகம் குடியாத்தத்தில் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ளது. எங்களது வீட்டிலிருந்து, புதிய பேருந்து நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். இந்த வழக்கில் எங்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா மனுவை நாங்கள் எதற்காக தாக்கல் செய்தோம் என்றால், உயில் எழுதிக்கொள்ளலாம் என்று தாக்கல் செய்துள்ளோம். பொய்யான ஆவணங்களை தயார் செய்து, எதிர்மனுதாரரை ஏமாற்றும் நோக்கத்துடன் தாவா மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2011, டிசம்பர் மாதவாக்கில் மழை காலத்தில் குப்பம்மாள் கீழே விழுந்து அவரது தலையில் அடிப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தேதியில் இருந்து குப்பம்மாள் படுத்தபடுக்கையாக இருந்தார் என்றாலும், நல்ல மனநிலையில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. குப்பம்மாள் இறந்த பிறகு பொய்யான ஆவணங்களை தயார் செய்து, தாவா மனுவை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லி உள்ள விவரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல. குப்பம்மாள், எவ்வித ஆவணத்தையும் எழுதும் மனநிலையிலோ, உடல்நிலையிலோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. குப்பம்மாள், நான் சொல்வது போல் நல்ல மனநிலையிலும், உடல்நிலையிலும், இருந்த காலத்தில் எவ்வித

ஆவணங்களையும் ஏற்படுத்தவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வேண்டப்பட்ட சாட்சிகளை வைத்து, குப்பம்மாளின் கையெழுத்தை பொய்யாக போட்டு, தாவா மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.